## கழக – கூட்டணிக் கட்சியினர் தீவிர வாக்கு சேகரிப்பு!



பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் ஆ.கிருஷ்ணசாமி – பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியத்தில் உள்ள ஊராட்சிகளில் ஒன்றியச் செயலாளர் ப.ச.கமலேஷ் தலைமையில் கழக நிர்வாகிகள் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி சார்ந்த தோழர்களுடன் பைக் பேரணியாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது ஏராளமான பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு ஆர்த்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தார்கள். உடன் தொகுதி பார்வையாளர் பி.டி.சி.செல்வராஜ் ஒன்றிய தேர்தல் கண்காணிப்பாளர் பா.நரேஷ் குமார் உள்பட ஒன்றிய கழக நிர்வாகிகள் மாவட்ட அணிகளின் ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள் கிளைக் கழக செயலாளர்கள் கழக இன்னாள் முன்னாள் நிர்வாகிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.



மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் ஆயிரம் விளக்கு தொகுதி வெற்றி வேட்பாளர் எழிலன் நாகநாதனை ஆதரித்து 110வது வட்டத்தில், சென்னை மேற்கு மாவட்ட இலக்கிய அணியின் சார்பில், மாநில இலக்கிய அணியின் துணை செயலாளர் நந்தனம் நம்பிராஜன் துவங்கி வைத்து, ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழக செயலாளர் வினோத் வேலாயுதம், வட்ட செயலாளர் கே.எஸ்.தினேஷ் பிரபு முன்னிலையில் மாவட்ட இலக்கிய அணியின் அமைப்பாளர் மு.சீனிவாசன் தலைமையில், நடைபெற்ற தீவிர வாக்கு சேகரிப்பில், இலக்கிய அணி நிர்வாகிகள்,தி.டி.பாபு, கி.பரமசிவம், அரும்.கோ.முரளி,பூ. சந்திரசேகவன், கி.தம்பிதுரை, மற்றும் பகுதி அமைப்பாளர்கள், இரா. சேஷாத்திரி என்கிற பாலா, எஸ். பழனி, வேதா.உதயசூரியன், சி.மூர்த்தி, மையிலை ஆர்.கோபி, மாவட்ட பிரதிநிதி சீனிவாசன், பான்டியன் மற்றும் இலக்கிய அணியின் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



மதசார்ப்பற்ற முற்போக்கு கூட்டணியின் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற தொகுதி தி.மு.கழக வெற்றி வேட்பாளர் டி.ஜெ.கோவிந்தராஜனை ஆதரித்து கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றிய செயலாளர் கி.வே. ஆனந்தகுமார், தொகுதி பார்வையாரும், மாநில கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சைதை எம். எஸ்.ஹரிபாபு, தண்டலச்சேரி ஊராட்சி தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட பாகம் 154, 155 ல்ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும் என்ற முழக்கத்துடன் வீடு, வீடாக வாக்குக்கள் சேகரித்தார். உடன் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சியினர் உள்ளனர்.



115–வது வார்டு, Dr. பெசன்ட் ரோடு பகுதியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சிறுபான்மை நல உரிமை பிரிவு சார்பாக பி.ஏ.காஜா, ராஜா முகமது தலைமையில் உதயசூரியன் சின்னத்தில் தீவர வாக்கு சேகரித்தனர். உடன் துணை அமைப்பாளர் பி.கே.அலி கான், மகளிர் அணி, கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொண்டனர்.



பூவிருந்தவல்லி சட்ட மன்ற தொகுதியில் போட்டியிடும் ஆ.கிருஷ்ணசாமியை ஆதரித்து உதயசூரியன் சின்னத்திற்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆலோசனை படி திருவள்ளூர் கிழக்கு ஒன்றியம் தி.மு.க. சார்பில் தொழூவூர் ஊராட்சியில் ஒன்றிய செயலாளர் சே.பிரேம் ஆனந்த் வாக்கு சேகரித்தார். உடன் தி.மு.க. நிர்வாகிகள் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

### தி.மு.க. ஆட்சியில்

# குன்னம் தொகுதி - வளர்ச்சி அடைந்த தொகுதியாக மாறியுள்ளது!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தீவிரப் பிரச்சாரம்!

பெரம்பலூர், ஏப் . 20 -

பெரம்பலூர் மாவட்டம், குன்னத் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், தீவிர பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறார். ஆலத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் என். கிருஷ்ணமூர்த்தி ஏற்பாட்டில் கொளக்காநத்தம், அயினாபுரம், அனைப்பாடி, கொளத்தூர், கூடலூர், இலுப்பைக்குடி, பிலிமிசை, கூத்தூர், நொச்சி குளம், புஜங்கராயநல்லூர், ஜெமீன் பேரையூர், அருணகிரிமங்கலம், திம்மூர், சில்லக்குடி, காரைப்பாடி, மேத்தால், இரசுலாபுரம், மாக்காய்குளம், இராமலிங்கபுரம், பாலம்பாடி ஆகிய கிராமங்களில் திறந்த வாகனத்திலும், நடந்து சென்றும் பொதுமக்களிடம் வாக்குகள் சேகரித்தார்.

அப்போது நொச்சிக்குளத்தில் சிவசங்கர் பேசுகையில், குன்னம் தொகுதி பின் தங்கியதாக இருந்தது. நான் அமைச்சராக பொறுப் பேற்ற பின்னர், மீண்டும் குன்னம் தொகுதி வளர்ச்சி பாதைக்கு சென்றுள்ளது. கொளக்காநத்தத்தில் ஒரு அரசு கலைக் கல்லூரி, சார் பதிவாளர் அலுவலகம் ஆகியவை கொண்டு வந்துள்ளேன்.

நீண்ட தூரம் சென்று போய் படித்த மாணவ, மாணவிகள் அருகிலேயே படிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. வெண்மணியில் ஒரு அரசு ஐடிஐ கொண்டு வரப்பட்டுள்ளது. மின்சார பிரச்சினையை தீர்க்க கொளக்காநத்ததில் ஒரு துணை மின்நிலையம் கொண்டுவரப்பட்டுள்ளது. பெரம்பலூரில் மாதிரி பள்ளி ரூ.50 கோடியில் கட்டப்படுகிறது. நொச்சிகுப்பத்தில் ரூ.3 லட்சத்தில் சிமெண்டு சாலை அமைக்கப்பட்டுள்ளது.

நொச்சிக்குளம்அரியலூர் இடையே ரூ.60 லட்சம் தார் சாலை அமைக்கப்பட்டுள்ளது. நொச்சியம்புஜங்கராயநல்லூர் சாலை, அங்கன் வாடி மையம், ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம் என கடந்த 5 ஆண்டுகளில் பல்வேறு வளர்ச்சி திட்டங்களை கொண்டு வந்துள்ளேன்.

மீண்டும் திமுக ஆட்சி அமைந்தால் மக்காச்சோளம், முந்திரி தொடர்பான தொழிற்சாலை கொண்டுவரப்படும். ரூ.8 ஆயிரத்திற்கான கூப்பன் வழங்கப்படும். மகளிர் உதவி தொகை, தமிழ்புதன், நான் முதல்வன் திட்டத்திற்கான உதவி தொகை உயர்த்தி வழங்கப்படும். 5ம் வகுப்பு வரை இருக்கும் காலை உணவு திட்டம் 8ம் வகுப்பு வரை நீட்டிக்க ப்படும். எனவே மீண்டும் திமுக ஆட்சிய அமைய மக்கள் எனக்கு வாக்களிக்க வேண்டும் என்று பேசினார்.

இதில் மாவட்ட பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் என். ராகவன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வ.சுப்ர மணியன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் டி.ஆர்.சிவங்கர், தி.மு.க. நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### மக்களவையில் தொகுதி மறுசீரமைப்பு மசோதா தோற்கடிப்பு!

# நாமக்கலில் தொடங்கிய போராட்டம் வெற்றி - பட்டாசு வெடித்து கொண்டாட்டம்!

## கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி. – பெ.ராமலிங்கம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

நாமக்கல், ஏப். 20 –

நாடாளுமன்ற மக்களவையில் தாக்கல் செய்யப்பட்ட தொகுதி மறுசீரமைப்பு சட்ட மசோதா, எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த எதிர்ப்பால் தோற்கடிக் கப்பட்டது மக்களாட்சி மற்றும் கூட்டாட்சி தத்துவத்திற்கு கிடைத்த வெற்றியாகும் என நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் கே. ஆர்.என். இராஜேஸகுமார் தெரிவித்தார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கடந்த 16ஆம் தேதி நாமக்கல் வந்திருந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் கருப்பு சட்டை அணிந்து தொகுதி மறு சீரமைப்புக்கு எதிராக தமிழ்நாட்டில் முதன் முதலாக நாமக்கல் நல்லிபாளையத்தில் உள்ள என் கே செல்லப்பன் வீட்டின் முன்பு அமைக்கப்பட்டு இருந்த கொடிக் கம்பத்தில் கருப்பு கொடி ஏற்றினார்= 16ஆம் தேதி காலை ஏற்றிய கருப்புக்கொடி 17ஆம் தேதி நடைபெற்ற மக்களவையில் தோற்கடிக்கப்பட்டது

இதை எடுத்து முதல்வர் மு க ஸ்டாலின் அவர்கள் ஏற்றி வைத்த கருப்புக்கொடியை கே.ஆர்.என். இராஜேஸகுமார் எம்.பி இறக்கி வைத்தார்,

இந் நிகழ்ச்சிக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஒன்றிய அரசு கொண்டு வந்த தொகுதி மறுசீரமைப்பு மசோதா தென்னிந்திய மாநிலங்களின் அரசியல் உரிமையை பறிக்கும் நோக்கத்துடன் உருவாக் கப்பட்டதாக குற்றம் சாட்டினார்.

குறிப்பாக மக்கள்தொகையை கட்டுப்படுத்திய தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கு எதிராகவும், வடஇந்திய மாநிலங்களுக்கு அதிகாரக் குவியலை அதிகரிக்கும் வகையிலும் இந்த மசோதா வடிவமைக்கப்பட்டிருந்தது என்றார். இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம், மாவட்ட அவைத் தலைவர் சி. மணிமாறன், மாநகராட்சி மேயர் கலாநிதி, துணை மேயர் பூபதி நகர கழக செயலாளர் ராணா ஆனந்த், சிவகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு, பட்டாசு வெடித்து இனிப்புகள் வழங்கி வெற்றியை கொண்டாடினர்.

### ஆயிரம் விளக்கு கழக வேட்பாளர்

# எழிலன் நாகநாதனை ஆதரித்து பிரச்சாரம்!

## நந்தனம் நம்பிராஜன் – மு.சீனிவாசன் பங்கேற்பு!

சென்னை, ஏப்.20-

மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் ஆயிரம் விளக்கு தொகுதி வெற்றி வேட்பாளர் எழிலன் நாகநாதனை ஆதரித்து 110வது வட்டத்தில், சென்னை மேற்கு மாவட்ட இலக்கிய அணியின் சார்பில், மாநில இலக்கிய அணியின் துணை செயலாளர் நந்தனம் நம்பிராஜன் துவங்கி வைத்து, ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழக செயலாளர் வினோத் வேலாயுதம், வட்ட செயலாளர் கே.எஸ்.தினேஷ் பிரபு முன்னிலையில் மாவட்ட இலக்கிய அணியின் அமைப்பாளர் மு.சீனிவாசன் தலைமையில், நடைபெற்ற தீவிர வாக்கு சேகரிப்பில், இலக்கிய அணி நிர்வாகிகள்,தி.டி.பாபு, கி.பரமசிவம், அரும்.கோ.முரளி, பூ. சந்திரசேகசவன், கி.தம்பிதுரை, மற்றும் பகுதி அமைப்பாளர்கள், இரா. சேஷாத்திரி என்கிற பாலா, எஸ்.பழனி, வேதா.உதயசூரியன், சி.மூர்த்தி, மையிலை ஆர்.கோபி, மாவட்ட பிரதிநிதி சீனிவாசன், பான்டியன் மற்றும் இலக்கிய அணியின் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

## கழக – கூட்டணிக் கட்சியினர் தீவிர வாக்கு சேகரிப்பு!



திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் வி.ஜி.ராஜேந்திரன் பெரியகுப்பம் சித்தி விநாயகர் கோயில் தெருவில் நகர செயலாளர் சி.சு. ரவிச்சந்திரன் தலைமையில் முன்னாள் நகர மன்ற தலைவர் பொன் பாண்டியன் முன்னிலையில் முன்னாள் கவுன்சிலர் சொக்கலிங்கம், மாவட்ட மகளிர் அணி தொண்டர் அணி துணை அமைப்பாளர் லட்சுமி சொக்கலிங்கம் ஏற்பாட்டில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது வேட்பாளர் வி. ஜி ராஜேந்திரனுக்கு பெண்கள் ஆரத்தி எடுத்தும், மலர் தூவியம் உற்சாகமாக வரவேற்பு அளித்தனர். இதில் நிர்வாகிகள் விஜயன், சுரேஷ், மகேஸ்வரி, மோகன் ராஜா(எ) முனுசாமி, தேவி கோபியரசு, லட்சிமணன் மற்றும் கிளைக்கழக, நகர கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தனர்.



திரு.வி.க நகர் சட்டமன்றத் தொகுதியின் திராவிட முன்னேற்றக் கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் கே.எஸ்.இரவிச்சந்திரன் முரசொலி மாறன் பூங்காவில் நடைப்பயிற்சி மேற்கொண்ட பொதுமக்களை நேரில் சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்குத் தீவிரமாக வாக்கு சேகரித்தார். இந்த நிகழ்வில் தொகுதிப் பொறுப்பாளர்கள் மேயர் பிரியா ராஜன், தாயகம் கவி எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர் தமிழ்வேந்தன், பகுதித் துணைச் செயலாளர் பெரம்பூர் ராஜன், மாமன்ற உறுப்பினர் புனிதவதி எத்திராசன், வட்டச் செயலாளர் பரிமளா சுரேஷ், தண்டலம் கிருஷ்ணமூர்த்தி மற்றும் திமுக மாணவரணி துணைச் செயலாளர் தமிழ் க. அமுதரசன் ஆகியோர் கலந்து கொண்டு வேட்பாளருக்கு ஆதரவாகப் பரப்புரை மேற்கொண்டு வாக்கு சேகரித்தனர்.



மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதி திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா விஜயராகபுரம், எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் வீடு வீடாக சென்று கழக அரசின் சாதனைகளை, 2026 ஆம் ஆண்டு கழக தேர்தல் அறிக்கை சிறப்பு அம்சங்களை தெரிவித்து வாக்கு சேகரித்தார். உடன் பகுதிச் செயலாளர் கே.கண்ணன் எம்.சி, மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு வாக்கு சேகரித்தனர்.



பல்லாவரம் சட்டமன்ற தொகுதியின் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வேட்பாளர் அனைகை முருகேசனுக்கு தாம்பரம் மாநகர கழக அவைத்தலைவரும் மாநகராட்சி துணை மேயருமான கோ.காமராஜ் தீவிரமாக வாக்கு சேகரித்தார். உடன் பகுதி கழக செயலாளர் தா.ஜெயக்குமார்,பாபுஜி,பாலாஜி,டாக்டர். அரவிந்தராஜ்,சந்திரன் மற்றும் கழக தோழர்கள் பெரும் திரளாக சென்று வாக்கு சேகரித்தனர்.



சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதி, 114 (அ) வட்டத்தில் கழக வெற்றி வேட்பாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்திற்கு வட்டச் செயலாளர் அ.தமீன் அன்சாரி, மாநகர் போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்ற சங்கப் பொருளாளர் கி.சீனிவாசன் தலைமையில், நிர்வாக பணியாளர் சங்க பொதுச் செயலாளர் வி.மகேந்திரன், தலைமை சங்க நிர்வாகிகள் மற்றும் சங்க முன்னோடிகள் பெருந்திரளாக கலந்து கொண்டு வீதி, வீதியாக வாக்கு சேகரித்தனர்.